DEPOSITION OF WITNESS
(Chapter XXV of BNSS)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANNIYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case                                                S.C.No. 243/2024

Prosecution Witness -P.W. 16

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. சுகந்தி |
| Father's Name | : | S. மாரிமுத்து |
| Village | : | Vadiveeswaram |
| Taluk | : | Agastheeswaram |
| Calling | : | Forensic Science Laboratory, Tirunelveli |
| Age | : | 46 |
| Date | : | 13.10.2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.10.2025.

(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.)

13.10.2025

**முதல் விசாரணை:-**

நான் தற்போது திருநெல்வேலி வட்டார தடய ஆய்வகத்தில் இளநிலை அறிவியல் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். பளுகல் காவல் நிலைய குற்ற எண். 94/2023 வழக்கு சம்பந்தமாக தலைமை காவலர் கிளாஸ்டின் ஜெயகுமார் வாயிலாக கன்னியாகுமரி ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனியிலிருந்து சட்டம் சார்ந்த மருத்துவர் பேராசிரியர் ராஜேஷிடமிருந்து 08.01.2024 அன்று ஜேம்ஸ் என்ற 54

வயதுடைய ஆண்நபருடைய உடல் உள்ளுறுப்புகளாகிய இரைப்பை, சிறுகுடல், கல்லீரல், சிறுநீரகம், இரத்தம் மற்றும் உப்புக்கரைசல் ஆகியவை மூடி முத்திரையிடப்பட்ட குப்பிகளில் எங்கள் ஆய்வகத்தில் பெறப்பட்டது. இந்த வழக்கில் கூடுதல் சொத்தாக பளுகல் காவல் நிலைய குற்ற எண். 94/2023, 302, 380 இ.த.ச. என்று எழுதப்பட்ட MGM Diamond என லேபிள் கொண்ட 180 மில்லி லிட்டர் கொள்ளளவு கொண்ட கண்ணாடி குப்பியில் 60 ML பழுப்பு நிற திரவமும், மற்றும் ஊதா நிற குருனையும் காணப்பட்டது. அந்த கண்ணாடி குப்பி மூடி முத்திரைப்பட்டிருந்தது. அவை நீதித்துறை நடுவர், குழித்துறை அவர்களிடமிருந்து 07.02.2024 அன்று ஆய்வகத்தில் நஞ்சியல் பிரிவில் பெறப்பட்டது.

உள்ளுறுப்புகளில் இரைப்பையில் Carbofuran என்ற நச்சுப்பொருளும், 1035 மில்லி கிராம் எத்தில் ஆல்கஹாலும் காணப்பட்டது. சிறுகுடலில் Carbofuran என்ற நச்சுப்பொருளும், 207 மில்லி கிராம் எத்தில் ஆல்கஹாலும் காணப்பட்டது. கல்லீரல் மற்றும் சிறுநீரகத்தில் Carbofuran என்ற நச்சுப்பொருளும், 863 மில்லி கிராம் எத்தில் ஆல்கஹாலும் காணப்பட்டது. இரத்தத்தில் Carbofuran என்ற நச்சுப்பொருளும், 138 மில்லி கிராம் எத்தில் ஆல்கஹாலும் காணப்பட்டது. உப்புக் கரைசலில் Carbofuran அல்லது எத்தில் ஆல்கஹால் காணப்படவில்லை. அந்த விவரத்தை நான் ஒரு அறிக்கையாக தயார் செய்து நானும், துணை இயக்குநர் ஜேம்ஸ் அந்தோணி ராஜும் கையொப்பமிட்டு, பேராசிரியர் மற்றும் சட்டம் சார்ந்த மருத்துவர் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ. 9 ஆவணம் அந்த அறிக்கைதான்.

கூடுதலாக வழக்கில் தொடர்புடைய சொத்தான குப்பியிலிருந்த ஊதா நிற குருனையுடன் கூடிய பழுப்பு நிற திரவத்தை பகுப்பாய்வு செய்ததில் Carbofuran என்ற நச்சுப்பொருள் மற்றும் 38.84 சதவிகித எத்தில் ஆல்கஹால் காணப்பட்டது. அந்த விவரத்தை நான் ஒரு அறிக்கையாக தயார் செய்து நானும், துணை இயக்குநர் ஜேம்ஸ் அந்தோணி ராஜூம் கையொப்பமிட்டு, பேராசிரியர் மற்றும் சட்டம் சார்ந்த மருத்துவர் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். **அந்த அறிக்கை அ.சா.ஆ. 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

Carbofuran என்பது செடிகளுக்கு இடக்கூடிய பூச்சிக்கொல்லி மருந்து. Carbofuran சந்தையில் விற்கும்போது Furadan என்று பெயரிட்டு விற்கப்படுகிறது. Furadan என்பது Carbamate வகையான பூச்சிக்கொல்லி மருந்து. சந்தையில் விற்கக்கூடிய Furadan னை ஒரு நபர் அருந்தினால் அவரின் உடல் உறுப்பினை இரசாயன பகுப்பாய்வு செய்யும்போது Carbofuran இருப்பது தெரியவரும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :-</u>

பூச்சிக்கொல்லி மருந்துகளை பொதுவாக Furadan என சொல்வார்கள் என்றால் சரியல்ல. Carbofuran தான் Furadan என சொல்வார்கள். Furadan என்பவதில் Carbofuran என்பது தவிர வேறு வேதியல் பொருட்களும் கலந்திருக்கும் என்றால் சரிதான். வேறு என்ன வேதியல் பொருட்கள் காணப்பட்டது என எங்களுடைய அறிக்கைகளில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நச்சுப்பொருட்களை மட்டும்தான் நாங்கள் குறிப்பிட்டுள்ளோம். எங்களுடைய

அறிக்கையில் எத்தில் ஆல்கஹால் இருந்ததாக சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். குருனை என நான் குறிப்பிட்டுள்ளது கெட்டியாக இருக்கும் ஒரு பொருளைதான் சொல்கிறேனா என்றால் ஆமாம். அந்த குருனை உடலில் முழுமையாக கரைந்தால்தான் நச்சுத்தன்மை வெளியே வரும் என்றால் சரியல்ல, கரைந்தாலும் வரும், வயிற்றுச்சுவரில் ஒட்டிக்கொண்டாலும் வரும். அவ்வாறு குருனையாக உடலை தவிர, வேறு உடல் உள்ளுறுப்புகளில் அது இருக்காது என்றாலும் அந்த குருனை கரைந்தபிறகுதான் அதில் உள்ள நச்சுப்பொருள் மற்ற உடல் உள்ளுறுப்புகளுக்கு இரத்தமாக போய் சேர முடியும் என்றால் சரிதான். இரைப்பையில் மட்டும்தான் அது குருனையாக இருந்திருந்தால் இருந்திருக்க முடியும் என்றால் சரிதான். இரைப்பையிலும் குருனையாக இருந்ததாக எங்களுடைய அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் எங்களுடைய Note Sheet ல் குறித்து வைத்துள்ளோம். Carbofuran குருனை எத்தில் ஆல்கஹாலுடன் சேர்த்த எவ்வளவு நேரத்தில் அது கரைந்து திரவ நிலைக்கு போகும் என்று சொல்ல முடியுமா என்றால் அது சொல்ல முடியாது. அது எவ்வளவு நேரம் எத்தில் ஆல்கஹாலில் போட்டு கலக்கிறமோ அதை பொறுத்தது. ஒரு வேளை அவ்வாறு கலக்காமல் இருந்தால் கூட Carbofuran குருனை எத்தில் ஆல்கஹாலுடன் சேர்க்கும்போது இயற்கையாக திரவ நிலைக்கு சென்றுவிடும் என்றால் ஆமாம். ஆனால் சிறிது அதிக நேரம் எடுக்கும். நீரில் கரைவதை காட்டிலும் எத்தில் ஆல்கஹாலில் Carbofuran குருனை குறுகிய நேரத்தில் கரைந்து விடும் என்றால் சரிதான். MGM Diamond என்று லேபிள் ஒட்டப்பட்ட கண்ணாடி குப்பில் இருந்த

திரவத்தில் Carbofuran குருனை அப்படியே இருந்ததாகதான் எங்களுடைய அறிக்கையில் கூறியுள்ளோம் என்றால் சரிதான். Carbofuran என்ற நச்சுப்பொருள் Furadan என்ற சந்தை பெயரில் உள்ள பூச்சிக்கொல்லி மருந்து தவிர வேறு அதே போன்ற பூச்சிக்கொல்லி மருந்துகளிலும் இருக்க வாய்ப்புண்டு என்றால் சரிதான். அதனால் MGM Diamond குப்பியில் இருந்த Carbofuran னும், உடல் உள்ளுறுப்புகளிலும் காணப்பட்டதாக நான் சொல்லும் Carbofuran னும் ஒரே பொருளிலிருந்து வந்தவை என என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். உடல் உள்ளுறுப்புகள் ஆய்வகத்தில் 08.01.2024 அன்று பெறப்பட்டது. இதர பொருட்கள் உயிரியல் பிரிவில் 02.01.2024 அன்று பெறப்பட்டு, நஞ்சியல் பிரிவில் 07.02.2024 அன்று பெறப்பட்டது. அதை நாங்கள் 08.02.2024 அன்று பகுப்பாய்வுக்கு எடுத்துக் கொண்டோம். உடல் உள்ளுறுப்புகளில் காணப்பட்டதாக நான் சொல்லும் Carbofuran அந்த நபரின் உயிரை எடுக்கும் அளவிற்கு இருந்ததா என்று என்னால் சொல்ல முடியுமா என்றால் முடியாது. அதை மருத்துவர்தான் சொல்ல முடியும். உடல உள்ளுறுப்புகளில் Carbofuran எவ்வளவு இருந்தது என்று கணிக்க முடியாது. இருந்தது என்றுதான் தெரிந்து கொள்ள முடியும். Carbofuran அருந்திய பிறகு அது மேலே சொல்லியுள்ள உடல் உள்ளுறுப்புகளில் போய் சேருவதற்கு எவ்வளவு நேரம் ஆகும் என்று சொல்ல முடியுமா என்றால் மருத்துவர் தான் சொல்ல முடியும். இரத்தத்தில் எத்தனை சதவிகிதம் விஷம் இருந்தது என்று எங்களால் சொல்ல முடியும் என்றால் சொல்ல முடியாது. விஷம் இருந்தது என்று மட்டும்தான் சொல்ல முடியும். உடல் உள்ளுறுப்புகளிலும், இரத்தத்திலும் எத்தனை சதவிகிதம் அல்லது

எவ்வளவு விஷம் இருந்தது எங்கள் ஆய்வில் தெரிய வருமா என்றால் தெரிய வராது. இருக்கிறதா, இல்லையா என்று மட்டும்தான் தெரிய வரும். ஒரு விஷப்பொருள் உடல் உள்ளுறுப்புகளிலும், இரத்தத்திலும் கண்டறியப்படும்போது அது எத்தனை சதவிகிதம் அல்லது எவ்வளவு இருந்தது என்ற விவரத்தை நாங்கள் சொல்ல வேண்டும் என்றாலும் அவ்வாறு சொன்னால்தான் ஒரு நபரின் இறப்பை ஏற்படுத்துவதற்கு அந்த விஷம் போதுமானதா என்று புரிந்து கொள்ள முடியும் என்றாலும் அதனால் அந்த விவரங்கள் தெரிய வராத நாங்கள் செய்த ஆய்வு சரியான முறையில் செய்யப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. நாங்கள் கொடுத்த அறிக்கைகளை பார்த்து ஒரு மருத்துவரால் அந்த உடல் உள்ளுறுப்புகளில் இருந்த நஞ்சுப்பொருளால் ஒரு நபர் இறந்திருக்க கூடும் என்று சொல்ல முடியுமா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அது மருத்துவர் தான் சொல்ல முடியும். உடல் உள்ளுறுப்புகளில் எத்தனை சதவிகிதம் அல்லது எவ்வளவு நச்சுப்பொருள் இருக்கிறது என்று கண்டறியக்கூடிய பரிசோதனைகளும் இருக்கின்றன என்றால் எல்லாப் பொருட்களுக்கும் கிடையாது. Carbofuran னின் அளவை கண்டறிய அவ்வாறு பரிசோதனைகள் இருக்கிறதா என்றால் இல்லை. நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் Carbofuran அளவை கண்டறிவதற்கு பரிசோதனைகள் இருக்கின்றன என்றால் சரிதான். ஆனால் நாங்கள் எங்கள் ஆய்வகத்தில் அந்த பரிசோதனைகள் செய்ததில்லை. நாங்கள் எங்கள் பரிசோதனைகளில் எவ்வளவு சதவிகிதம் அல்லது அளவீடு நச்சுப்பொருள் இருக்கிறது என்ற பரிசோதனை

செய்வோம் என்றாலும் உள் நோக்கத்தோடு அந்த அளவீடுகளை எங்கள் அறிக்கையில் நாங்கள் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.